23rd April 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The scarcity is due to the restrictions on the import of camphor.

SRI V. SANKARAN : திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய தீவிர பிரசாரத்தினால் கற்பூரத்திற்கு பெருமளவு கிராக்கி குறைந்து விடலாம் என்று நம்புகிறார்கள். அம்மாதிரி ஏற்படுமென்று சர்க்கார் நினைக்கிறார்களா?

MR. SPEAKER : I rule the question out of order.

SRI K. SATTANATHA KARAYALAR : சாதாரணமாக நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் சூடம் எவ்வளவு தேவைப்படுகிறது என்பதைப்பற்றிய தகவல் இருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

SRIMATHI HEMALATHA DEVI : தினப்படி உபயோகப்படுத்துகிற கற்பூரம், பக்தி மிகுந்தவர்கள் பூஜை செய்வதற்கும் மருந்துக்கும் அதிகமாக உபயோகப்படுத்தப்படுவதனால் அவற்றை அதிகமாக வரவழைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்நிய நாட்டுச் செலாவணி மிகவும் குறைவாக இருப்பதன் காரணமாக பல பண்டங்களை வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்வதைக் குறைத்திருக்கிறோம். அவ்வாறு குறைக்கப்பட்ட பண்டங்களில் ஒன்று கற்பூரம். ஆனால் இந்த கற்பூர இறக்குமதி அளவை அதிகப்படுத்தவேண்டுமென்று இந்த ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

SRI R. SRINIVASA IYER : Are the Government aware that in Kerala, in a laboratory, camphor is manufactured? Will the Government take steps to start such an industry here?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member need not go to Kerala. Even here, in Naduvattam, experiments are being conducted to manufacture camphor. But if we want it on a large scale, we require camphor plants as plantations.

SRI K. VINAYAKAM : Due to the scarcity of camphor in the State and due to the policy adopted by the Central Government in not releasing the required foreign exchange for its import, do the Government realise, they are indirectly encouraging ungodliness in our country?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not think so. Godliness does not depend only on burning camphor.

Manufacture of pig iron.

* 104 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether licences for the setting up of a pig iron factory in the private sector have been granted; and

(*b*) the stage at which the setting up of the factory stands?

[23rd April 1959

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir. Government of India have already granted a licence under the Industries (Development and Regulations) Act, 1951, to Textool Company, Limited, Coimbatore, for the manufacture of pig iron. They have also agreed in principle to issue licences to Kalinga Industries, Limited, Calcutta, and Soundararajan and Company, Madras, for setting up such plants in Salem district, subject to finalisations of import of foreign machinery.

(b) Textool Company, Limited, has already commenced production of pig iron. Of the other two companies, one is negotiating for getting a clearance from the Chief Controller of Imports and Exports in regard to the grant of import licences for the capital goods required for its scheme and the other is awaiting the production of Neyveli lignite for commercial purposes.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் பகுதியில் தயாரிக்கப்படுகிற பிக் அயர்ன் காஸ்ட் பர் பவுண்டு என்ன ஆகும் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : நெய்வேலியில் தயாரிக்கப்படுகிற லிக்னைட் விலை நிர்ணயிக்கப்பட்ட பிறகுதான் இதன் விலையும் என்ன ஆகும் என்று சொல்வதற்கு முடியும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : இந்த டெக்ஸ்டைல் கம்பெனி லிமிடெட் வேலை செய்வதன் மூலம் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்குமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : 15 ஆயிரம் டன் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையில் டைரெக்ட் எம்பிளாய்மெண்டு 180 பேர்களுக்குக் கிடைக்கும். ஆக்ஸிலரி எம்பிளாய்மெண்டு கொஞ்சம் அதிகம் பேர்களுக்குக் கிடைக்கக் கூடும்.

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லா, கோட்டகிரி பக்கத்தில் இத்துறையில் இருந்து பாறைகளைக்கொண்டுபோய் அங்கே பிக் அயர்ன் தயாரிக்கிறார்கள் என்பது தெரியுமா? இங்கேயே அதை உற்பத்தி செய்யாவிட்டாலும் இந்த இடங்களைச் சர்வே செய்வதற்காவது ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது அந்தவிதமான சர்வே சென்னை ராஜ்ய சர்க்காராலேயே செய்யப்படும்.

The Geological Survey of India in Madras State is now looking into the iron deposits in the Nilgiris district, particularly between Coonoor and Kotagiri.

SRI C. R. RAMASWAMI : May I know the production figures in respect of the Textool Pig Iron Furnace?

THE HON. SRI R. VENKATARAMAN : It is between 35 and 75 tons per day.

SRI S. LAZAR : May I know what will be the capacity of these units when they commence production?

THE HON. SRI R. VENKATARAMAN : Each one is 50 tons a day—I mean these three units.

Mordhana Dam

* 105 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் 'மோர்தாணு' அணைக்கட்டு கட்டுவதற்கான திட்டம் போடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

(இ) இல்லையென்றால் அதற்கான திட்டம் போடப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The proposal was considered and dropped as not being feasible.

(*b*) & (*c*) Do not arise.

SRI V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் தாலூகாவில் குடி தண்ணீர் பஞ்சம் அதிகப்படியாக இருக்கிற காரணத்தினால் அந்தத் துரிதமாகக் கட்டிமுடிக்கவேண்டும் என்று கருதுகிற காரணத்தினால்—பாசனத்திற்கு இல்லாவிட்டாலும் குடிதண்ணீர் வசதியை உத்தேசித்தாவது—உடனடியாக எவ்வளவு சீக்கிரம் அந்த அணைக்கட்டைக் கட்ட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அந்த அணைக்கட்டைக் கட்டுவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த அணைக்கட்டு விஷயமாக நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார்கள். பரிசீலனை செய்ததில் இப்போது 500 ஏக்கரா புஞ்சை நிலங்கள் சாகுபடி ஆகிக் கொண்டிருக்கின்றன. மேலும் 200 ஏக்கரா இருபோக நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. தவிரவும் பாலாற்றைப் பொறுத்தவரையில் மழை காலத்தில்தான் தண்ணீர் வருகிறது. அதைக்கொண்டு இப்போது விவசாயம் செய்து வருகிறார்கள். இந்த அணைக்கட்டைக் கட்டினாலும் அவை எல்லாம் பாதிக்கப்படும் என்கிற காரணத்தையொட்டி இந்த அணைக்கட்டு கட்டும் யோசனை கைவிடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : குடியாத்தம் தாலூகாவில் வேறு எங்காவது அணைக்கட்டு கட்டும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : 1931-ம் வருஷம் முதலே இதைப் பற்றி பலபல திட்டங்கள் வகுக்கப்பட்டு எல்லாம் நிறைவேற்றபபட்டுவிட்டன. ஆகவே, இப்போது புதிய திட்டம் ஒன்றும் போடுவதற்கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : எந்தப் பகுதியில் அணைக்கட்டு கட்டினாலும் அதனால் நிலம் பாதிக்கப்படாது. அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறதா ? ஆகவே அந்தக் காரணத்தைச் சொல்லி 500 ஏக்கரா பாதிக்கப்படும் என்று இந்தத் திட்டத்தை கைவிடுவது நியாயமா? உணவுப் பஞ்சத்தினால் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் வெளிநாட்டிலிருந்து தானியம் வரவழைக்கக்கூடிய நிலைமையில் இந்தப் பகுதியில் விவசாயத்திற்கு வசதி செய்யாவிட்டாலும் குடிதண்ணீர் பஞ்சத்தைப் போக்கவாவது உடனடியாக இந்த அணைக்கட்டு கட்டுவதைப் பற்றி சர்க்கார் யோசிப்பார்களா ? அப்படிச் செய்யாவிட்டால் . . . .